தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 10, திருவள்ளுவர் ஆண்டு—2055

2024 பிப்ரவரி 22, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு."

நீதி வழுவாமல் ஓர் அரசு நாட்டில் இருக்குமேயானால் அது, பருவகாலத்தில் தவறாமல் பெய்யும் மழையினால் வளமான விளைச்சல் கிடைப்பதற்கு ஒப்பானதாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

சுற்றுச்சுவர்

***55599—திரு. தி. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஏகணிவயலிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஏகணிவயல் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் சுமார் 479 அடி, 146 மீட்டர் நீளத்தில் ரூ.16.07 இலட்சம் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டு, 26–2–2024 முதல் பணி தொடங்கப்பட உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன் அவர்கள்.

திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நாளொன்றுக்கு 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயன்பெறும் விதத்திலே இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், ஒரு முன்னோடித் திட்டமாக காலை உணவுத் திட்டத்தை செயல்படுத்தியமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் எனது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏகணிவயலிலுள்ள தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் என பெரும்பான்மையான பள்ளிகள் கிராமங்களில்தான் இயங்கி வருகின்றன. அப்பள்ளிகளில், பாம்புகள் உள்ளிட்ட விஷப் பூச்சிகளிடமிருந்து மாணவ, மாணவியரை அரணாக இருந்து காப்பது சுற்றுச்சுவர்தான். எனது தொகுதியிலே, உதாரணமாக ஏகப்பெருமாளூர், ஊர்வணி, குளத்தூர், மணலூர், வடக்கம்மாபட்டினம், சின்னப்பட்டமங்கலம், சனிக்காடு, ஒக்கூர் போன்ற பல ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் சுற்றுச்சுவர் இல்லாமல் ஒரு பாதுகாப்பற்ற நிலை நிலவுகிறது. அதனால், அனைத்து ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளுக்கும், நடுநிலைப் பள்ளிகளுக்கும் சுற்றுச்சுவர் மற்றும் கழிவறை வசதியுடன்கூடிய கூடுதல் வகுப்பறைகளை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2024 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நிதி நெருக்கடி இருந்தாலும், எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு பள்ளிகளுக்காக, கல்விக்காக அதிகமான நிதியை ஒதுக்கி, தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்ட வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மட்டும் 2021–2022, 2022–2023, 2023–2024 ஆகிய மூன்று ஆண்டுகளில் மொத்தம் 11 கிலோ மீட்டர் நீளத்திற்கு சுற்றுச்சுவர் அமைப்பதற்காக 15 கோடி ரூபாய் நிதியொதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஏறத்தாழ 4,900 பள்ளிகளுக்கு, 900 கிலோ மீட்டர் அளவிற்கு சுற்றுச்சுவர் அமைப்பதற்காக 499 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எனது அறந்தாங்கி தொகுதியிலே சுமார் 15,000 பேர் கொண்ட ஒரு பெரிய ஊராட்சி, நாட்டாணிபுரசக்குடி ஊராட்சி. அதனை இரண்டாகப் பிரித்து கோபாலபட்டினம் என்ற புதிய ஊராட்சியை உருவாக்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, ரெத்தினக்கோட்டை ஊராட்சி சுமார் 6,000, 7,000 மக்கள்தொகை கொண்ட ஒரு பெரிய ஊராட்சியாக உள்ளது. அதனை இரண்டாகப் பிரித்து கூத்தாடிவயல் என்ற ஒரு புதிய ஊராட்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் ஊராட்சிகளைப் பிரிக்கவும், புதிய ஒன்றியங்களை அமைத்துக் கொடுக்கவும் அறிவுறுத்தி இருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அதைத்தவிர, சில ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாக மாற்றுவதற்கும் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அதற்கென ஒரு குழு அமைத்து, ஆராய்ந்து அந்தந்தப் பஞ்சாயத்துகளின் ஒப்புதல்களைப் பெற்று, ஊராட்சிகளைப் பிரிப்பதற்கும், மற்றவைகளுக்கும் கருத்துருக்களைப் பெற்று, அதற்குத் தகுந்தாற்போல் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தருமபுரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாகர்கூடல், அங்கனாம்புதூர் உள்ளிட்ட கிராமப்புற துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் அமைக்க, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் நிதி வழங்கி, இப்பள்ளிகளைப் பசுமைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: இப்போதுதான் பள்ளிகள் எல்லாம் பசுமையாகக் காட்சியளிக்கின்றன. ஏனென்றால் குழந்தைகள் நேயப் பள்ளி என்று, கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 800 கோடி ரூபாய் மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஏறத்தாழ 5,653 வகுப்பறைகளில் வேலைகளைத் துவக்கி இதுவரை 3,493 பள்ளிகளில் கட்டடங்கள் புதிதாகக் கட்டப்பட்டு, உருவாக்கப்பட்டிருக்கின்றன. மேலும், இதில் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவரும் கட்டித் தருகிறோம். பள்ளிகள் 30 ஆண்டுகாலமாகப் பழுது பார்க்கப்படாமலும், கொரோனா

2024 பிப்ரவரி 22]

காலத்தில் மூடப்பட்டு இருந்ததாலும் அவை சிதைந்து கிடந்தன. அந்த நேரத்தில் Comprehensive School Infrastructure Development Scheme *என்ற திட்டத்தை உருவாக்கி, அதன்மூலமாகக் கிட்டத்தட்ட 90 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இன்னும் 10 சதவிகிதப் பணிகள்தான் இருக்கின்றன. 90 சதவிகிதத்திற்கும் மேலான பணிகள் முடிக்கப்பட்டு, பள்ளிகள் புத்துயிர் பெற்றிருக்கின்றன. ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் சுற்றுச்சுவர் மற்றும் வகுப்பறைகள் கட்டும் பணிகள் எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு, 30 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பணிகளை மேற்கொண்டதன்மூலம் ஆரம்பப் பள்ளிகளிலிருந்து அனைத்துப் பள்ளிகளையும் திரும்பிப் பார்த்த ஒரே முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) நம் முதல்வர் தளபதியார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். என் தொகுதிக்குட்பட்ட, வத்தல்மலை பகுதியில் பால்சிலம்பு என்ற கிராமம் இருக்கிறது. பால்சிலம்பு கிராமத்திலிருந்து, ஊராட்சி ஒன்றியத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் 60 கிலோ மீட்டர் தூரம் பயணிக்க வேண்டும். தாலுகா அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், 85 கிலோ மீட்டர் தூரம் பயணிக்க வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் 90 கிலோ மீட்டர் தூரம் பயணிக்க வேண்டும். ஆகவே, பால்சிலம்பு கிராமத்தை வத்தல்மலை ஊராட்சியுடன் சேர்த்துவிட்டால், அது தருமபுரி ஒன்றியத்துடன் சேர்ந்துவிடும். பால்சிலம்பு கிராமம் மட்டும் ரேகடஅள்ளி ஊராட்சிக்கு உட்பட்டது. அது கடத்தூர் ஒன்றியத்திற்குட்பட்டது. இந்த ஒன்றியத்திற்கு வரவேண்டுமென்றால் 80 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பயணிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பால்சிலம்பு கிராமத்தை வத்தல்மலை ஊராட்சியுடன் சேர்த்தால், மலைவாழ் பகுதி மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.*

அதேபோல, என் தொகுதியில் மட்டும் 8 ஊரக துவக்கப் பள்ளிகளுக்கு compound wall *கட்டப்பட வேண்டியிருக்கிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அனைத்து பள்ளிகளுக்கும்* compound wall, *குழந்தைகளுக்கான*

toilet கட்டித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: பள்ளிகளுக்கெல்லாம் கழிவறைகள் கட்டுவது, cycle stand அமைப்பது மற்றும் சிறிய சிறிய பழுதுகளை எல்லாம் நீக்குகின்ற பணிகளுக்காக கடந்த ஆண்டு 190 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு (மேசையைத் தட்டும் ஒலி) செய்யப்பட்டு, செலவிடப்பட்டிருக்கிறது. இன்னும் குறைவான பணிகள் மட்டுமே மீதம் உள்ளன. பால்சிலம்பு கிராமத்தை வத்தல்மலை ஊராட்சியுடன் சேர்க்க அக்கிராம மக்கள் விரும்புகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுத்துபூர்வமாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகளுடன் கலந்துபேசி பால்சிலம்பு கிராமத்தை வத்தல்மலை ஊராட்சியுடன் சேர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊராட்சிகளை இணைப்பது மற்றும் பேரூராட்சியாக்குவது ஆகியவற்றிற்காக குழு அமைக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவித்தார்கள். என்னுடைய பண்ருட்டி வட்டத்தில், சிறுவத்தூர் மற்றும் சேமக்கோட்டை ஊராட்சியில் இடம்பெற்றுள்ள ஏரிப்பாளையத்தில் 2,000–க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். தனிப் பஞ்சாயத்து வேண்டுமென்று தொடர்ச்சியாக 3 நாட்களுக்கும் மேலாக போராட்டம் நடத்தப்பட்டது. அதற்காக தற்போது அரசால் குழு அமைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரும் அதுசம்பந்தமாக கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தினார். ஆனால், ஊராட்சியாகப் பிரித்து அறிவிப்பதற்கான அரசாணை மட்டும் வெளியிடப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாக வெளியிடுவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன். (குறுக்கீடு) தங்களிடம் அளிப்பதற்காக ஒரு கடிதத்தையும் எடுத்து வந்திருக்கிறேன்.

2024 பிப்ரவரி 22]

சரியான நேரத்தில் வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அதில் என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பது குறித்து அனைத்தும் தெரியும். ஒரு பஞ்சாயத்தைப் பிரிக்கின்றபோது, அந்தப் பஞ்சாயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மக்கள் பிரதிநிதிகள் அதற்கு ஒத்திசைவு அளிக்க வேண்டும். அந்தப் பஞ்சாயத்தைப் பிரிப்பதற்கு அவர்கள் சம்மதம் தெரிவிக்க வேண்டும். இதுமட்டுமின்றி, இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று பஞ்சாயத்தைப் பிரிக்க வேண்டுமென்றால், அவர் கூறியதை implement *செய்ய வேண்டும் என்றால், தேர்தல் முடிந்தபிறகு, மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்று, சிறிது காலம் சென்ற பிறகுதான் உரிய நடவடிக்கை எடுக்க முடியும். தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற ஊராட்சி ஒன்றிய மக்கள் பிரதிநிதிகளின் பதவிக் காலம் இன்னும் 1 வருடம் இருக்கிறது. அதற்குள்ளாக எந்தெந்தப் பஞ்சாயத்துகளைச் சேர்க்க வேண்டும்; எந்தெந்தப் பஞ்சாயத்துகளைப் பிரிக்க வேண்டும் என்பது குறித்து ஆய்வு செய்யப்படும். அதற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது கோரிக்கையைக் குறிப்பிட்டு கடிதம் கொடுத்தால், தாங்கள் குறிப்பிடும் பகுதியை சம்பந்தப்பட்ட குழு ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

42—

வள்ளுவர் கோட்டத்தினைப் புனரமைத்தல்

***51720—டாக்டர் நா. எழிலன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2024 பிப்ரவரி 22

வள்ளுவர் கோட்டத்தினைப் புனரமைக்கும் பணி எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

18-9-1973 அன்று வள்ளுவர் கோட்டம் கட்டுவதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, 1976 ஆம் ஆண்டு அப்பணிகள் முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது. அது ஏறத்தாழ 5 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. திராவிட கட்டடக் கலையையும், பல்லவக் கட்டடக் கலையையும் இணைத்து கட்டப்பட்டதுதான் வள்ளுவர் கோட்டம். திருவாரூர் ஆழித்தேரை, மாதிரி வடிவமாகக் கொண்டு, கல்தேர், கலைச் சிற்பம் உள்ளிட்ட வேலைப்பாடுகளுடன் வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டது. அது 128 அடி உயரம் கொண்டது. 1977-ல் அரங்கத்தினுடைய நடுவில் எந்தத் தூணும் குறுக்கிடாதபடி 67 மீட்டர் நீளமும், 31 மீட்டர் அகலமும் கொண்ட, 4,000 பேர் அமரக்கூடிய வகையில் பிரம்மாண்டமான அரங்கம் அமைக்கப்பட்டது. வள்ளுவர் கோட்டம் சென்னை நகரத்தின் மையப் பகுதியில் சிறப்பாக அமைந்துள்ளது. அது 10 ஆண்டு காலம் பாராமுகமாகப் பாழ்பட்டு கிடந்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே, அதற்கு முக்கியத்துவம் தந்து, அதைச் சீரமைக்க வேண்டும், புனரமைக்க வேண்டும் என்று எங்கள் துறைக்கு ஆணை பிறப்பித்தார்கள். அந்த வகையில், அரசாணை எண் 116, நாள் 13-7-2023-ன் வாயிலாக ரூ.80 கோடி மதிப்பீட்டில் வள்ளுவர் கோட்டத்தை தற்போதுள்ள நவீன technology-ஐப் பயன்படுத்தி, புனரமைக்கவும், எப்போதும் பார்வையாளர்கள் வந்து பார்ப்பதற்கும், பொதுவான காரியங்களுக்குப் பயன்படுத்துவற்கும் கூட்டரங்கத்தினைப் பயன்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டார்கள். மேலும், கலையரங்கம் மற்றும் குறள்மாட கூரை புனரமைத்தல், தரை புதுப்பித்தல், தூண்கள் மற்றும் நுழைவாயில் பகுதிகளில் சிறப்பு வேலைப்பாடுகள் செய்தல், மாற்றுத்திறனாளிகளுக்கு நடைபாதை ஏற்படுத்துதல், உணவுக்கூடம், விற்பனை மையம் மற்றும் மழை நீர் வடிகால் வசதிகள் ஏற்படுத்துதல், 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவுகொண்ட நீர் சேமிப்புத் தொட்டி அமைத்தல், செயற்கை நீரூற்று அமைத்தல், ஒலி-ஒளி காட்சிகள் அமைத்தல், கூட்டரங்கம் மற்றும் குறள்